பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 24 வெள்ளிக்கிழமை (08-01-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 43

# இராணுவ எச்சரிக்கையையும் மீறி அங்கிலிக்கன் ஆயர் யாழ். வருகை!

## கிளாலி கடல் வழியே படகில் நேற்றிரவு வந்து சேர்ந்தார்

யாழ்ப்பாணம், ஜனவரி 8

யாழ். ஏரி ஊடாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குச் செல்வதற்கு அனுமதி வழங்க ஸ்ரீலங்கா கூட்டுப்படைத் தலைமையகம் மறுத்திருந்த போதிலும்—

அதனையும் மீறி அங்கிலிக்கன் திருச்சபையின் புதிய ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ நேற்றிரவு யாழ். வந்து சேர்ந்தார்.

அவரும் மற்றொரு வண. பிதாவும் கிளாலிக் கடல் வழியாகப் படகில் நேற்றிரவு குடாக்கடலைக் கடந்தனர். அவர்களுக்குரிய பாதுகாப்பை விடுதலைப் புலிகள் வழங்கியதாக அறிய வந்தது.

புதிய ஆயரும், கிழக்காசிய தேசியக் கிறிஸ்தவ மன்றச் செயலாளரான அருட்கலாநிதி ரியன்ஸி பெரேராவும் நேற்று நள்ளிரவு 11. 30 மணியளவில் யாழ். நகருக்கு வந்து சேர்ந்தனர்.

நேற்று முன்தினம் நண்பகல் அளவில் ஆயர் குழுவினர் கிளிநொச்சியை வந்தடைந்தனர். அவருடன் மேலும் ஐந்து குருமார் கிளிநொச்சிக்கு வந்திருந்தனர். அவர்கள் நேற்றும் நேற்று முன்தினமும் கிளிநொச்சியில் தங்கியிருந்து அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தனர்.

நேற்று இரவு ஆயரும், வண. பிதா ரியன்ஸி பெரேராவும் வேகப்படகு ஒன்றில் கிளாலிக் கடலைக் கடந்தனர். ஆயரின் குழுவில் இடம்பெற்று கிளிநொச்சிக்கு வந்திருந்த ஏனைய குருமார் இன்றிரவு யாழ் வருவர் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆயர் கென்னத் பெர்னாண்டோ யாழ்ப்பாணத்தில் மூன்று நாட்கள் தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இங்கு தங்கியிருக்கும்போது

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



சுதந்திரமாய் இழுபறிப்படுகினம் போல......!

## சுதந்திரக் கட்சிக்குள் இழுபறி உச்சக் கட்டத்தில்?

கொழும்பு, ஜனவரி 8

பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நிலவும் கருத்து வேறுபாடு உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கட்சிக்குள் அநுரா பண்டாரநாயக்காவுக்கு ஆதரவு அதிகரித்து வருவதால் அவரின் கை ஓங்குவதாகவும்—

கட்சித் தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தமது தலைமைப் பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக தமது அதிகாரங்களை விட்டுக்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில்—

கட்சிக்குள் ஏற்பட்டுள்ள இழுபறி நிலையை அடுத்து கட்சியின் சகல தொகுதி அமைப்பாளர்களையும் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவசர தந்தி மூலம் கொழும்புக்கு அழைத்து கட்சித் தலைமையகத்தில் கூட்டம் ஒன்றை நடத்தினார் என அறிவிக்கப்படுகிறது. (உ-எ-6

## பல்கலைக்கழகங்களுக்கு பெண்களே கூடுதல் தெரிவு!

கடந்த ஆகஸ்டில் நடைபெற்ற ஜி. சீ. ஈ. (உயர்தரப்) பரீட்சையின் முடிவுகளின் படி ஆண்களைவிட பெண்களே பல்கலைகழகங்களுக்கு தெரிவு செய்யப்படும் வாய்ப்பை அதிகம் பெற்றிருக்கின்றனர்.

பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெறுவதற்கான அடிப்படைத் தகுதியைப் பெற்றுள்ளவர்களின் பட்டியலின் படி —

மருத்துவத்துறையில் 4 ஆயிரத்து 261 பெண்களும் 3 ஆயிரத்து 576 ஆண்களும் —

கலைப் பிரிவில் 17 ஆயிரத்து 612 பெண்களும் 8 ஆயிரத்து 731 ஆண்களும் —

வர்த்தகத் துறையில் 8 ஆயிரத்து 962 பெண்களும் . ஆயிரத்து 7.1 ஆண்களும் இடம் பெற்றுள்ளனர்.

பொறியியல் மற்றும் பௌதிக விஞ்ஞானத் துறைகளில் மட்டும் பெண்களிலும் பார்க்க ஆண்கள் அதிகம் தகுதி பெற்றுள்ளனர்.

பொறியியல் பீடத்துக்கு 2 ஆயிரத்து 927 ஆண்களும் 831 பெண்களும் தகுதி பெற்றுள்ளனர். (உ-எ)

## பாரிஸில் புலிகளுடன் ஹமீத் பேசவில்லை

### பத்திரிகைச் செய்திகளை மறுக்கிறார் ரணில்

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பாரிஸிலோ, அல்லது வேறு எந்த ஐரோப்பிய நாட்டிலோ அமைச்சர் ஹமீத் பேச்சு நடத்தவில்லை.

— இவ்வாறு மறுப்புத் தெரிவித்திருக்கிறார் அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்க.

அமைச்சர் ஹமீத்துக்கும், விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுக்கும் இடையில் பாரிஸில் நடைபெற்ற பேச்சுக்களின் போது, கொழும்பில் தாக்குதல்களை நடத்துவது இல்லை என்று விடுதலைப் புலிகள் உறுதியளித்திருப்பதாக [illegible] நேற்று வெளியான '[illegible]' ஐலண்ட் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இச் செய்தி குறித்து நேற்று கொழும்பில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டின் போது அமைச்சர் ரணிலிடம் கேட்கப்பட்டது.

[illegible] அமைச்சர் ரணில் மேற்படி மறுப்பை தெரிவித்தார். (உ-எ-6)

## கிளாலிப் படுகொலைகள்: தொடர்ந்தும் சடலங்கள் கரை ஒதுங்குகின்றன

யாழ்ப்பாணம், ஜன. 8

கடந்த சனிக்கிழமை இரவு கிளாலிக் கடலில் அப்பாவித் தமிழ்ப் பயணிகள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் நடத்திய கொடூரத் தாக்குதல்களில் உயிரிழந்த மற்றும் சிலரின் சடலங்கள் நேற்று அதிகாலை கிளாலிப் பகுதிக் கடலில் கரை ஒதுங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது

கடந்த சில நாட்களாக இக்கரையிலும், அக்கரையிலும் சடலங்கள் ஒதுங்குவதை அவதானிக்கும் போது, படையினரின் கொடூரத் தாக்குதலில் உயிரிழந்த அப்பாவிப் பயணிகளின் எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கும் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

நேற்று அதிகாலை ஒதுங்கிய சடலங்களில் ஒன்று சிறு குழந்தையினுடையது.

கடந்த புதனன்று நான்கு ஆண்களின் சடலங்களும்,

செவ்வாயன்று ஏழு சடலங்களும் ஒதுங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-7-151-162)

## வவுனியாவில் 2 படையினர் பலி

கொழும்பு, ஜன. 8

வவுனியா காடுகளில் அரசுப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த மோதல் சம்பவம் ஒன்றில் இரண்டு படையினர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கூட்டுப்படைகள் தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் அங்கமன நேற்று செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார். (ஓ எ)

## கொடிகாமத்தில் ஹெலித் தாக்கு

தென்மராட்சி, ஜன. 8

நீண்ட நாட்களின் பின்னர் கொடிகாமம் பகுதியில்— கண்டி வீதியில் நேற்றுப் பகல் 11.30 மணியளவில், ஹெலி ஒன்று வீதியில் சென்ற வாகனத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தது. (ஓ-117)

## உயிரிழந்த மற்றிருவர்

நேற்று முன்தினம் கித்தன்கேணி விமானத் தாக்குதலில் உயிரிழந்த ஒன்பது பேரில் அடையாளம் காணப்படாது இருந்த இருவர் நேற்று அடையாளம் காணப்பட்டனர்.

தெல்லிப்பழையில் இருந்து இடம்பெயர்ந்த கந்தையா வேலாயுதம் (47 வயது),மூளாயைச் சேர்ந்த சிவராசா (41 வயது) ஆகியோரது சடலங்களே நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அடையாளம் காணப்பட்டன (ஓ-15)

## மீட்புநிதி

யாழ்ப்பாணம், ஜன. 8

இதுவரை மீட்புநிதி செலுத்தத் தவறிய வசதி படைத்தோர்—சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுளைச் சேர்ந்தோர் — தமது மீட்பு நிதிக் கடனை இன்று பிற்பகல் 3 00 மணி தொடக்கம் 3. 30 மணி வரை நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் செலுத்தலாம் என அறிவிக்கப்படுகிறது. (ஓ)

## ஷெல் தாக்குதல்

சுழிபுரம், ஜன. 8

ஸ்ரீலங்காப் படையினர் நேற்றுமுன்தினம் இரவு 7-30 மணியளவில் பண்டத்தரிப்பு, சில்லாலைப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

அதை அடுத்து பனிப்புலம், வடலியடைப்பு, சுழிபுரம் வடக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்தனர். [ஓ-28-99]

## வல்வைக் கடலில் குண்டு சத்தங்கள்

வல்வெட்டித்துறை, ஜன. 8

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் நேற்று அதிகாலை 2-30 மணியளவில் — சுமார் 10 நிமிடங்கள் வரை— குண்டுச் சத்தங்கள் கேட்டன. (ஓ-155)

## தமிழக ஆளுநர் பதவி விலகுவார்?

சென்னை, ஜன 8

தமிழக ஆளுநர் பீஷ்மநாராயணசிங் பதவி விலகலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக சென்னை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## துருப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடிவு:

ஸ்ரீலங்கா இராணுவத்தில் துருப்புகளின் எண்ணிக்கையை எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் அதிகளவில் பெருக்க அரசு துரித நடவடிக்கை எடுத்து வருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்சமயம் பொலீஸார் உட்பட ஒரு லட்சத்து 80 ஆயிரமாக இருக்கும் படை பலத்தை அதிகரிக்கும் நடவடிக்கையில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது (ஓ-5)

## மூன்று நாட்கள் இந்தியாவில் பிரேமா!

கொழும்பு, ஜன 8

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் 12 ஆம் திகதி நடைபெறவிருக்கும் சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு தாயகம் திரும்பும் வழியில் ஜனாதிபதி பிரேமதாஸா மூன்று நாட்கள் இந்தியாவில் தங்குவார்.

இம்மாதம் 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை இந்தியாவில் உள்ள புனித தலங்களுக்கு திரு பிரேமதாஸா விஜயம் செய்வார் என்று அறிவிக்கப்பட்டது.

## நேர்முகப்பரீட்சை

கிராம சேவையாளர் தெரிவுப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கான நேர்முகப் பரீட்சை ஒன்று இம் மாத மூன்றாம் வாரத்தில் இங்கு நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்காக வடக்கு- கிழக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளர் திரு. க சபாபதிப்பிள்ளை திருமலையிலிருந்து எதிர்வரும் 15 ஆம் திகதி யாழ். வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-5-162)

## புதிய ஆயர் நாளை தெரிவு

தென்னிந்திய திருச்சபையின் யாழ். மறை மாவட்ட புதிய ஆயரைத் தெரிவு செய்யும் நிகழ்ச்சி நாளை சனிக்கிழமை காலை 9 30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஒட்லி மண்டபத்தில் நடைபெறும்.

பெப்ரவரி மாத இறுதியில் ஓய்வு பெறவிருக்கும் யாழ். ஆயர் அதி. வண. டி ஜே. அம்பலவாணரின் இடத்துக்கே புதியவர் தெரிவு செய்யப்பட இருக்கிறார்.

புதிய ஆயர் தேர்வில் வண. கலாநிதி எஸ். ஜெபநேசன், வண. ஏ. ஏ,போல் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

(உ-க-எ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JDCSI

## தென் இந்திய திருச்சபை
யாழ். ஆதீனம்

இவ் ஆதீனத்தின் விசேட கூட்டம் பிரதிநிதிகளுக்கு முன் அறிவித்தபடி வட்டுக்கோட்டையில் சனிக்கிழமை 9 ஆம் திகதி 9 30 மணிக்கு நடைபெறும்.

அ. கதிர்காமர்
தலைவர்
விசேட கூட்டம்

(5716)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
பண்டத்தரிப்புக் கோட்டம்.

# முக்கிய அறிவித்தல்

திங்கள் (04 - 01 - 1993) நிகழவிருந்த பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு சித்தன்கேணி கணேச வித்தியாசாலையில் நிகழ உள்ளது.

குறிப்பு: பதிவுகள் மீள்பரிசீலனை செய்யப்படவுள்ளதால், அனைத்து நிறுவன இயக்குநர் பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்கள் கூட்டத்திற்கு சமுகம் தந்து பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

நன்றி.

- செயலாளர்

(23971)

## ஆண்டு 6 முதல் 11 வரையான
# விஞ்ஞானம் பயிலும் மாணவர்களே!

ஆசிரியரை உங்கள் இல்லங்களுக்கு அழைத்து தனியாகவோ / சிறு குழுவாகவோ விஞ்ஞான பாடம் கற்க விரும்புகிறீர்களா?

அப்படியாயின் தொடர்புகளுக்கு:-

NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக - யாழ்ப்பாணம்.

[அலுவலக நேரம்:- சனி, ஞாயிறு காலை 8 — மாலை 5 மணிவரை]

(சி- 165)

## மாபெரும்
# வெகுஜனப் போராட்டமும் ஊர்வலமும்

காலம் : 1 —01—93 திங்கட்கிழமை
நேரம் : 10.00 மணியளவில்
ஆரம்பம் : நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றல்

### நாலு அம்சக் கோரிக்கை

- ✱ 32 மாதகால அர்த்தமற்ற போரை முடிவிற்குக் கொண்டுவருதல்.
- ✱ பூநகரி இராணுவத்தை வாபஸ் பெற்று, அதனூடான பாதையை மக்களின் பாவனைக்காக திறக்கப்படல்.
- ★ அத்தியாவசிய பொருள்களின் தடையை நீக்கி, அவற்றை சகல பொதுமக்களுக்கும் கட்டுப்பாடு, தட்டுப்பாடின்றி கிடைக்கக் கூடியதாக விநியோகம் செய்தல்.
- ✱ விடுதலைப்புலிகளுடன் உடனடியாக பேச்சு வார்த்தையை ஆரம்பித்தல். மற்றும்

நத்தார் தினத்தன்று நடைபெற்ற கண்மூடித்தனமான விமானத்தாக்குதலினால் ஏற்பட்ட படுகொலைகளைத் தெரியப்படுத்தல்.

ஊர்வலம் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பமாகி, கோவில் வீதி வழியாக செம்மணியைச் சந்தியை அடைந்து, பின்னர் ஆஸ்பத்திரி வீதியூடாக கச்சேரியை அடையும். இந்த இரண்டு இடங்களிலும் மகஜர்கள் கையளிக்கப்படும்.

அனைத்து மக்களையும் ஒன்று திரண்டு இவ் ஊர்வலத்தில் பங்குபற்றி சிறப்பிக்குமாறு

அழைக்கின்றோம்

வலிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்.

(சி/2535)

SPOKEN ENGLISH
With
GRAMMER
by
Mr. JOY

ஆரம்பம்:
9-1-93 4Pm

Personal
New Science Centre
Elilakam Front Lane,
JAFFNA.

(சி/4113)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
# பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1993 ஜனவரி 29 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

பதவிகள்:

(அ) சதுரங்க ஆட்ட/நற்காப்பு உதைபந்தாட்ட இடைவரவுப் போதனாசிரியர்.

(ஆ) கிளிநொச்சி விவசாய பீடம் - இடைவரவு உடற்கல்விப் போதனாசிரியர்.

கொடுப்பனவு விகிதம்:
மணித்தியாலமொன்றுக்கு 75/- ரூபா. (மாதம் ஒன்றுக்கான உச்ச அளவு 900/- ரூபா)

மேற்குறிக்க பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களையும், விவரங்களையும் நிதிக்கிளையில் 20/- ரூபாவைச் செலுத்தி இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும், விவரங்களையும் பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20 ரூபா பெறுமதியான காசுக்கட்டளை / தபாற்கட்டளையுடன் 23x10 ச. மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க / திணைக்களங்கள் அரசகூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

-பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
29-12-1992

(சி/4109)

## உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன. 8
மட்டுவில் ஸ்ரீ பன்றித் தலைச்சிக் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் தேர்த்திருவிழாவும், தீர்த்தத் திருவிழாவும் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளன. (க)

o o o

உரும்பராய், ஜன 8
உரும்பராய் வடக்கு பேச்சியம்மன் ஆலயத்தில் திருவிளக்குப் பூசை இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும். (சு- 154)

o o o

யாழ்ப்பாணம், ஜன. 8
கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோயில் தீர்த்தத் திருவிழா இன்று காலை 8 மணிக்கு நடைபெறும். (க)

o o o

கொழும்புத்துறை, ஜன 8
கொழும்புத்துறை மணவியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் ஐயனார் ஆலயம், நாயன்மார்கட்டு அருள்மிகு ஸ்ரீ ராஜராசேஸ்வரி பேச்சி அம்பாள் ஆலயத்தில் மாதாந்தத் திருவிளக்குப் பூசை இன்று மாலை ஆறு மணிக்கு இடம்பெறும். (ஓ 30)

o o o

கொழும்புத்துறை, ஜன 8
கொழும்புத்துறை ஆத்தியம்பதி அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரர் விநாயகர் ஆலயம், நாயன்மார்கட்டு ஸ்ரீ ராஜராசேஸ்வரி பேச்சி அம்பாள் ஆலயத்தில் திருவாதவூரர் புராணப்படிப்பு பூர்த்தி விழாவும், வீதிப்பஜனை ஊர்வலமும் இன்று காலை 6 00 மணிக்கு நடைபெறும் (ஓ-3)

o o o

கொழும்புத்துறை, ஜன 8
ஈச்சமோட்டை அருள்மிகு ஞானவைரவர் ஆலயத்தில் இன்று காலை 6.00 மணிக்கு திருவாதவூரர் புராணப்படிப்பு முடிவு நடைபெறும். (உ-30)

## ஆருத்திரா தரிசனம்

யாழ்ப்பாணம், ஜன 8
திருவெம்பாவை விரதத்தின் இறுதி நாள் விழா இன்று நடைபெறும். இன்றைய சிறப்பு நிகழ்வான ஆருத்திரா தரிசனம் காலையிலேயே - உதயத்தின் போது ஆலயங்களில் நடைபெறும்.

திருவெம்பாவை பூர்த்தி அடைவதை ஒட்டி வீதிப் பஜனை, திருவாசகம் முற்றோதல் ஆகியனவும் இன்றுடன் பூர்த்தி அடையும். (அ-31)

## அறிவித்தல்

வெள்ளி 08-01-93 வகுப்புக்கள் நடைபெறாது. 09-01 93 சனி வழமைபோல் வகுப்புகள் நடைபெறும்.

இயக்குநர்.
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி.

## பால் விற்பனை

நல்லூர் கோவில் பகுதியில் எம்மால் நியமிக்கப்பட்ட பால் விற்பனை முகவர் நிலையம் 01-01-1993 இல் இருந்து செயல்பட்டு வருகிறது. உங்களின் பால் தேவைக்காக அவருடன் தொடர்பு கொள்ளுங்கள். பாலின் தரத்திற்கு சங்கம் உத்தரவாதமளிக்கிறது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: நல்லூர் கந்தசாமி கோவில முன்பாக, "முருகன் ஸ்ரோர்ஸ்" நல்லூர்.

யாழ் மாவட்ட-
அபிவிருத்திக் கூட்டுறவுச்-
சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு.

(சி/4107)

# பிரேமா எதிரணியினரை திசை திருப்ப முயற்சி
## இப்படிச் சொல்கிறார் சிறிமா

கொழும்பு, ஜன. 8
1994 டிசம்பரில் தான் ஜனாதிபதித்தேர்தல்நடத்தப்படும் என்று திரு. பிரேமதாசா அறிவித்திருப்பது எதிர்க்கட்சியினரைத் திசை திருப்பும் ஒரு முயற்சியாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா 'திவயின' வாரஇதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

1993ஆம் ஆண்டை தேர்தல் ஆண்டாக சுதந்திரக்கட்சி கருதுவதாகவும்—

தேர்தலில் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகளை தமது கட்சி மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

# யாழ். வட்ட லியோ கழகம்
நடாத்தும்
'சோபனா ஆடை அகம்'
ஆதரவுடனான
## வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ். மாவட்ட பிரபல விளையாட்டுக் கழகங்கள் இதில் பங்குபற்றுகின்றன.

ஆரம்பம்:- 08-01-93 (இன்று) நேரம் - பி.ப. 2.30.
இடம்:- வேம்படி மகளிர் கல்லூரி மைதானம்.
காலம்:- 8, 14, 17, 23, 24-01-93

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ். வட்ட லியோ கழகம்

(சி/4114)

'SUBRA' சுப்றா கல்வி நிலையம்
சிந்தன்கேணி

- ★ ஆண்டு 9, 10, 11 இன் பிரிவு (2) ஆரம்பமாகின்றது.
- ★ ஆண்டு 4, 5, 6, 7, 8 புதியவகுப்புக்கள்
- ★ ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான வகுப்பு,
- ★ ஆண்டு 11 இற்கான பகல் நேர வகுப்புக்கள்

## ஆரம்பம்: 10 - 01 - 1993
காலை 9—00 மணி

★ கடந்த ஆண்டு கல்விகற்ற ஆண்டு 8, 9, 10 மாணவர்களில் இதுவரை சமுகமளிக்காதவர்கள் 10-01-93 அன்று சமுகமளித்து அனுமதியை உறுதி செய்து கொள்ளவும். தவறியவர்களின் அனுமதிகள் இரத்து செய்யப்பட்டு புதிதாக அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு வழங்கப்படும்.

[23978]

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

வேலைப்பகுதி
தொழிலாளர் / பொதுத்
தொழிலாளர் (அமைய)

# பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாண மாநகரசபை அமைய அடிப்படையில் தொழிலாளர் பதவி வெற்றிடங்களை நிரப்பத் தீர்மானித்துள்ளது.

தகைமைகள்:-

01. கல்வி:- 5 ஆம் வகுப்பில் சித்தி
02. வயது:- 18 வயது தொடக்கம் 40 வயது வரை
03. யாழ்ப்பாண மாநகரசபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் தாமே தயாரித்த விண்ணப்பத்துடனும், தமது தகைமைகளை நிரூபிக்கும் மூலச் சான்றிதழ்களுடனும், தேசிய அடையாள அட்டையுடனும், 16-1-93 ஆம் திகதியன்று சனிக்கிழமை காலை 9 00 மணிக்கு, நல்லூர் பண்டாரமாளிகை வளவில் அமைந்துள்ள மாநகரசபை ஆணையாளர் அலுவலகத்திற்குச் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். 6-1-1993

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

(சி/4112)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயிகளே!

அங்லோ ஏசியன் பேர்டிலைசெர்ஸ் கம்பனி

வழங்கும்......

"பிளாஸ்ட் ஒல்"

**BLAST ALL**

நெற் பயிர்களைப் பாதிக்கும்

கழுத்து எரிவந்த நோயை திறம்பட கட்டுப்படுத்தவும்,

மற்றும்

புகையிலை, உருளைக் கிழங்கு, தக்காளி மரக்கறி பயிர்களில் ஏற்படும்

பங்கசு நோய்களைக் கட்டுப்படுத்தவும்

சிறந்த பங்கசு நாசினி

★ **பிளாஸ்ட் ஒல்** ★

பீடைநாசினிகள் விற்பனையாளர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-2889)



- அந்தியேட்டிக்குத் தேவையான (12 "x 10" Recopy) புகைப்படங்கள்
- நினைவஞ்சலி கல்வெட்டு புத்தக அட்டை லேபல்களுக்கு வேண்டிய Line Half Tone - Colour Blocks
- Photo Polymer (பிளாஸ்ரிக் Blocks)
- றபர் சீல்
- ஓவிய வேலைகள்
- விளம்பர ஸ்ரிக்கேஸ்

★ தரமாக குறைந்த விலையில்

★ குறுகிய காலத்தில்

பெற்றுக்கொள்ள:

**கொழும்பு ஸ்ரூடியோ**

யாழ்ப்பாணம்.

(சி-4160)


# மதில் கரைகளோடு பலரும் ரத்த வெள்ளத்தில் கிடந்தனர்

## சித்தன்கேணிச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 8

"பெரும் இரைச்சலுடன் வந்த புதுவகையான விமானங்களில் இருந்து நெருப்பு பிழம்புபோல் புறப்பட்ட ஷெல்கள் எங்கும் பரவலாக விழுந்து வெடித்தன. திடீரென மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால மக்கள் திக்குத் திசை தெரியாது ஓடினர். மதில் கரைகளில் பதுங்கியவர்கள் மீது விழுந்த சன்னங்களால் பலர் இரத்த வெள்ளத்தில் துடிதுடிப்பதைக் கண்டேன்."

இப்படித் தெரிவித்தார் சித்தன்கேணியைச் சேர்ந்த சுப்பிரமணியம் தில்லைநாதன் (27 வயது).

நேற்று முன்தினம் சித்தன் கேணிப் பகுதியில் 'சுப்பசொனிக்' விமானங்கள் நடத்திய அனர்த்தங்கள் குறித்து அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அன்று காலை 10-35 மணியளவில் பெரும் இரைச்சலுடன் இரு விமானங்கள் வட்டமிட்டன. வழமைபோல் மக்கள் பார்த்துக்கொண்டு நின்றனர். பண்டத்தரிப்புப் பக்கத் திசையிலிருந்து வந்த விமனம் ஒன்று திடீரென தாழப்பறந்து தாக்குதலை ஆரம்பித்தது. அது ஏவிய றொக்கெட்டுகளில் இருந்து நெருப்புக் குண்டுகள் போன்று தீப்பிழம்புகள் வந்து விழுந்தன. விமானம் தாழப் பதிந்ததும் வீதியால் சென்றவர்கள் மதில் கரைகளுடன் ஒதுங்கினர்.

விமானத்தின் சத்தம் கேட்டு நான் பிள்ளையார் கோவிலுக்கு ஓடினேன். ஓடும்போது மதில் கரையில் ஒதுங்கிய பலர் இரத்த வெள்ளத்தில் கிடந்ததைக் கண்டேன்.

மீண்டும் விமானங்கள் அடுத்தடுத்து 'றொக்கட்' மூலம் குண்டுகளை வீசிய வண்ணம் இருந்தன என்றார்.

பொலீஸ் அத்தியட்சகரான என். கதிர்காமநாதன் (55 வயது) என்பவர் சம்பவம் பற்றி விவரிக்கையில் தெரிவித்ததாவது:

நேற்று முன்தினம் காலை 10-45மணியளவில் திடீரென வட்டுக்கோட்டைப் பகுதியை வட்டமிட்ட விமானங்கள் திடீரென தாழப்பறந்ததும் எரிகுண்டுகள் போன்ற குண்டுகள் எனது வீட்டுப்பகுதியில் விழுந்தன. குளியலறையில் இருந்து தப்பிக கொண்டேன். வீதிக்கரையில் மக்கள் அலறும் சத்தங்கள் கேட்டன. விமானம் தாழப்பறந்ததும் பயங்கர வெடிச்சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து குண்டுகள் "பொல பொல" வென்று விழுந்தன — என்றார்.

(அ-3-162)

## திருட்டு

சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் உற்பத்திச் சங்கத்தின் சாராய விற்பனை நிலையம் கடந்த ஞாயிறு இரவு திருடர்களின் கைவரிசைக்கு இலக்கானது. (ஒ-117)

# ஈராக்கிய படைகள் மீண்டும் தயார் நிலையில் உள்ளன!

## ராணுவத்துறை அமைச்சர் அறிவிப்பு

பக்தாத், ஜன. 8

வளைகுடாப்போரில் தோல்வி கண்ட ஈராக்கிய படைகள் மீண்டும் முழு அளவிலான பயிற்சியுடன தயாரான நிலையில் உள்ளன என்றும்—

ஈராக்கின் கட்டுப்பாட்டில் தற்போது இல்லாத ஈராக்கின் வடக்கு மற்றும் தென் பகுதிகளை மீட்க ஈராக் ராணுவம் தயாராக இருப்பதாகவும்—

அந்த நாட்டின் ராணுவத்துறை அமைச்சர் அல மஜீத் அறிவித்திருக்கின்றார்.

ஈராக்கின் வடபகுதியை குர்திஷ் இன போராளிகள் தமவசம் வைத்திருப்பதும் தென்பகுதியை ஷியா இனப் போராளிகள் தம் வசம் வைத்திருப்பதும்—

அமெரிக்காவின் தலைமையிலான நேசநாட்டுப் படைகள் இரு பகுதியினருக்கும் தொடர்ந்து பாதுகாப்பு வழங்கி வருவதும் தெரிந்தவையே. ஈராக் ராணுவ அமைச்சரின் அறிவிப்பின் மூலம், ஈராக் மீண்டும் தமது பகுதியை மீட்க போரில் இறங்கும் என்று தெரியவருகின்றது.

# ஈராக்கிற்கு நேச நாடுகள் காலக்கெடு விதிப்பு!

போர் விமானங்கள் பறக்கக் கூடாது என்று தடைவிதிக்கப்பட்ட பகுதியில் நிறுத்தப் பட்டுள்ள போர் விமானங்களைச் சுட்டு வீழ்த்தப் பயன்படுத்தப்படும் ஏவுகணைகளை அகற்றுவதற்கு ஈராக்குக்கு 48 மணி நேர காலக்கெடுவை வழங்க அமெரிக்கா தலைமையிலான நேசநாடுகள் அணி தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் கடந்த சில நாட்களாக போர் விமானங்களைச் சுட்டு வீழ்த்தும் ஏவுகணைகளை ஈராக் குவித்து வந்தது.

ஆனால் காலக்கெடு விதிக்கப்பட்டதை வாஷிங்டனிலும், லண்டனிலும் அதிகார பூர்வ வட்டாரங்கள் உறுதி செய்யவுமில்லை; மறுக்கவும் இல்லை என்று பி. பி. சி. அறிவித்துள்ளது. (த-எ)


வலிகாமம் தெற்கு பிரதேச சபை

(சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்கள்)

**1993ஆம் ஆண்டிற்கான ஆதனவரி**

**1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்**

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 34, 146ஆம் பிரிவுகளின் கீழ் வலிகாமம் தெற்கு பிரதேசசபை நிர்வகத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நெல்வயல்கள் தவிர்ந்த அசைவற்ற ஆதனங்களது வருடாந்த மதிப்பீட்டின்படி 1992ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட வீதத்தில் 1993 ஆம் ஆண்டிற்கும் ஆதனவரி செலுத்தப்படல் வேண்டுமென வலிகாமம் தெற்கு பிரதேசசபையால் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட விகிதவரிப்பணங்கள் யாவும் நான்கு சம கந்தாயத் தவணைகளில் 1993 ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, ஜூன் 30, செப்டெம்பர் 30, டிசம்பர் 31 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்வரோ செலுத்தப்படல் வேண்டும்.

1993ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த வரிகள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் 10% கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன், அடுத்துவரும் கந்தாயங்களுக்கான வரி அதற்கு மூந்திய மாதத்தில் செலுத்தப்பட்டால் 5% கழிவும் அனுமதிக்கப்படும்.

மேற்குறிப்பிட்டவாறு சொல்லப்பட்ட காலங்களில் வரிகள் செலுத்தப்படாதவிடத்து, வெறும் காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% வீதமும் மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது 20% வீதமும் விறாந்துச் செலவு அறவிடப்படும்.

செல்வி தனுஜா தணிகாசலம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
05 - 01 - 1993.

(சி-2533)



NEW SCIENCE HALL

KANNATHIDDY, JAFFNA.

**93 A/L**

WEEKEND PAPER CLASS

(துரித மீட்டல் வினா-விடை)

BOTANY —
திரு. குணசிலன்
11-00 — 12-00
1-00 — 2-00

ZOOLOGY —
திரு. தம்பிராஜா
12-00 — 1-00

PHYSICS —
திரு. கணேசன்
2-00 — 3-00

CHEMISTRY —
திரு. மணியம்
3-00 — 4-00

ஆரம்பம்:

**09-01-1993**


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
1932 — 09 — 18

உதிர்வு!
1990 — 01 — 08

**Mrs. Rita Padaiweerasingham**

(இரத்தினம்)

அன்பின் ஒளிவிளக்காய், பாசத்தின் திருவுருவமாய், உண்மையின் ரூபமாய், எமக்கெல்லாம் வழிகாட்டியாய் வாழ்ந்த நீங்கள், எங்களை விட்டுப் பிரிந்து ஆண்டு மூன்று சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களில் அணையாத தீபமாய், என்றும் ஒளிர்கிறது. உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவன் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்;
அன்புக் கணவர், மகன், மகள்,
மருமக்கள், சகோதர, சகோதரியள்,
உறவினர், நண்பர்கள்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(5718)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

3 பேஸ், 2 H.P., 3 H.P., 4 H.P. மோட்டர்கள் ஸ்பின்னிங் மெஷின் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். ஜவ்னா எலெக்றோ பிளேற்றேர்ஸ், இல. 7, கஸ்தூரியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(23920)

வீடியோ கமரா, 180 டெக் N.V. 300 டெக், J.V.C. மிக்ஸர், ஸ்டில் கமராக்கள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. B.S போட்டோ, 40A, ராஜேந்திரா ரோட், குருநகர்.
(சி-4097)

### இலவச திருமண சேவை

36 வயது, திருவாதிரை, செவ்வாய் 2, சுவிஸில் தொழில்புரிபவருக்கு நகைத் தொழிலில் ஈடுபாடுள்ள மணப்பெண் தேவை. பெண்ணை அழைக்க ஆவன செய்யலாம். தொடர்பு: ஞாயிறு காலை. து. விமலா, நாச்சிமார் கோவிலடி.
(23934)

### மாறிய போட்டோஸ்ரற்

05-01-93இல் எம்மால் தவறுதலாக மாறி ஒப்படைக்கப்பட்ட முக்கிய ஆவணத்தின் போட்டோஸ்ரற் பிரதியை உடனடியாக எம்மிடம் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். ஸ்ரீகாந் புத்தகசாலை, இல. 501, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(23966)

### சங்கீதம் வினா-விடை

ஆண்டு 10, 11இல் சங்கீதம் கற்போருக்கும் வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்கும் பயன்தரும் சங்கீதம் வினா-விடை விற்பனையாகின்றது. ஆக்கம்: செல்வி அநேகா, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(23903)

### வெளிவந்துவிட்டது

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) பிரபல புத்தகசாலைகளில் மட்டும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-4104)

புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவோருக்குப் பயன் தரும் தமிழ் ஆண்டு-5 செயல்நூல் வெளிவந்துவிட்டது. விரிவான விளக்கங்கள் மாதிரி வினாத்தாள்கள் கொண்டது. ஆக்கம்: த. துரைசிங்கம், ஸ்ரீகாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம்
(23904)

### மணப்பெண் தேவை

இந்து, 29 வயது, செவ்வாய்க் குற்றமற்ற (ராகு கேதுக்களால் கிரகபாவம் 16) நட்சத்திரம் பரணியுடைய பட்டதாரி ஆசிரியருக்கு அழகும், பண்புமுடைய மணப்பெண் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம்.
(23967)

### O/L கணிதம்

Distinction பெறுபேறுடைய ஆண்டு 9, 10 உட்பட 30 வருட அனுபவம் உள்ள B.Sc. (Cey.) ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி
(23954)

### கோழித்தீன் விற்பனை

எம்மால் கோழிகளுக்கான பின்வரும் உணவு வகைகள் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தப்பட்டு வருகிறது நீங்களும் உங்களது கோழிகளுக்கு எமது உற்பத்தியை பாவித்து அதிக பயனைப் பெறுங்கள். முட்டையிடும் கோழியுணவு, வளரும் குஞ்சு உணவு, குஞ்சு உணவு, இறைச்சிக்குஞ்சு/ கோழி உணவு.

யாழ். மாவட்ட-
அபிவிருத்திக் கூட்டுறவுச்-
சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு.
(சி-4108)

## புதிய பிரிவு

**Advanced Spoken English Class Including Grammar**

ஆசிரியர்:
*REGIE*
(NILES)

ஆரம்பம்:
**09 - 01 - 93**
மாலை 4 - 30

**கீன்**
**கல்வி நிலையம்**
பலாலி வீதி,
திருநெல்வேலி.
(சி-4105)

## கீன்
## கல்வி நிலையம்

பலாலி வீதி,
திருநெல்வேலி.

பிரிவு - II
ஆண்டு 4 தொடக்கம்
11 வரை

விஞ்ஞானம் —
இரா. செல்வவடிவேல்
புகலவன்

கணிதம் —
வாமதேவன்
கருணாகரன்

தமிழ் —
புலவர் சிவா
திருச்செல்வன்

சமூகக்கல்வி —
குணசிங்கம்
சுகுமார்

ஆங்கிலம் —
கதிர்காமநாதன்
சந்திரமௌலி

வர்த்தகம் —
ஸ்ரீ

சித்திரம் —
யசோ

ஆரம்பம்:
**09-01-1993**
காலை 6 மணி
(சி-4106)

## 31ஆம் நாள் நினைவுச்சுடரும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில்:
21
—
08
—
1928

விண்ணில்:
09
—
12
—
1992



அமரர்
## சின்னையா இராசையா
(ஓய்வுபெற்ற பிரதிப்பிரதேச முகாமையாளர் - அரச மரக்கூட்டுத்தாபனம்)

பாசத்தின் சிகரமே - எம் பாதைக்கு ஆசானே
பண்பே உருவமாய் பலரோடும் பழகினீர்
அன்பெனும் ஊற்றினில் அமிழ்த்தியெம்மை வளர்த்தீர்
அனைவரும் அழுதிட அணைந்தீரே கார்த்திகை -
தீபமதில்
எமதாருயிர் தெய்வமே இனி எப்போதுனைக் -
காண்போம்
உமதாத்மாவின் சாந்திக்கு முருகனை -
வேண்டுகின்றோம்.

இன்று 08-01-1993 நண்பகல் எமது இல்லத்தில் நடைபெற உள்ள அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருமதி இராசையா.
(மனைவி)

ராணி கொட்,
7ஆம் கட்டை,
சங்கானை.
(5706)

## குருந்தம் கல்வி நிலையம்

17, பலாலி வீதி, திருநெல்வேலி.
பரமேஸ்வராச்சந்தி அருகாமை)

### ஆண்டு 6 முதல் G.C.E. (O/L) வரை

தனித்துவமிக்க ஆசிரியர் குழுவினால் கற்பிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| கணிதம் | — | சி. கிருபாகரன் |
| விஞ்ஞானம் | — | அ. கிறிஸ்ரி |
| தமிழ் / ஆங்கிலம் | — | த சஞ்ஜீவன் |
| வர்த்தகம் | — | சி. இளங்கிரன் |
| சமூகக்கல்வி | — | இ. சந்திரன் |

**03 - 01 - 1993**இல் ஆரம்பமாகியுள்ளது.

★ மட்டுப்படுத்தப்பட்ட (40 மாணவர்) அனுமதி.
★ உளவிருத்திசார் கற்பித்தல் முறை.
★ மாதாந்த மதிப்பீடு.
★ பாட அலகு முடிவில் கடந்த கால வினாக்கள் ஆராயப்படும்.

(23957)

முன்னாள் அதிபர்
**அமரர் ஏ. ஈ. தம்பர் அவர்களின்**
## ஞாபகார்த்த சொற்பொழிவு

காலம்: 09 - 01 - 1993 சனிக்கிழமை காலை 9 - 00 மணி.

இடம்: யாழ், மத்திய கல்லூரி மண்டபம்.

சிறப்புரை: மூதறிஞர் க. சி. குலரட்ணம் அவர்கள்

பொருள்: 'மத்திய கல்லூரி தந்த மூவர்'

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

குறிப்பு: சொற்பொழிவைத் தொடர்ந்து பழைய மாணவர் சங்க விசேட பொதுக் கூட்டம் நடைபெறும். அங்கத்தவர்கள் யாவரையும் தவறாது சமுகம் கொடுக்குமாறு அழைக்கப்படுகின்றீர்கள்.

ந. இராஜதேவன்.
செயலாளர்.

பழைய மாணவர் சங்கம்.
யாழ். மத்திய கல்லூரி.
(5713)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு:
22
—
08
—
1921



உதிர்வு:
09
—
12
—
1992

## திருமதி பூபதி சின்னத்துரை
(இளைப்பாறிய சுங்க இலாகா பெண் பரிசோதகர்)

யார் செய்தார் நீ செய்த சாதனை
யார் செய்வார் நீ செய்த தியாகம்
யார் தந்தார் நீ காட்டிய அன்பு
யார் தருவார் நீ கூறிய ஆறுதல்

ஆனந்தம், செல்வம், சாந்தம் யாவும் இழந்த நிலையில் யாரம்மா இனி எமக்கு?

பிள்ளைகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்,

326, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(23938)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# புதிய அரசியல் ஒழுங்கா இது?

கிளாலியில் கடற்படையினர் நடத்திய காட்டுமிராண்டித்தனத்தின் மரண ஓலமும், அவலமும் ஓய்வதற்கு முன்னர் சித்தன்கேணியில் விமானப்படையினர் அரக்கத்தனம் புரிந்துள்ளார்கள். தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதில் யார் அரசிடம் அதிக புள்ளி வாங்குவது என்று ஸ்ரீலங்கா அரசின் மூன்று படைகளும் போட்டி போட்டுக் கொண்டு செயற்படுவது ஒன்றும் புதியதல்ல

கடந்த இரண்டரை வருடங்களாக முப்படைகளும் தமிழ்ப் பொது மக்களை கொன்று குவிப்பதிலேயே தமது முழுக் கவனத்தையும், சக்தியையும் செலவிடுகின்றன. தமிழர்களைக் கொல்வதுதான் அவர்களை இராணுவ ரீதியாக வெல்வதற்கு ஒரே வழி என்ற சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் இயங்குகிறார்கள்.

அரசாங்கம் வகுத்த இந்தச் சூத்திரத்தை படையினர் அச்சொட்டாகச் செயற்படுத்துகிறார்கள்; அதற்கே இந்தப் போட்டிகள் எல்லாம்.

அரசாங்கத்தினதும், அதன் படைகளினதும் இந்தச் சூத்திரமும் செயற்பாடும் சிங்கள மக்களுக்குத் தெரியாமல் இல்லை. ஆனால் அவர்களில் தீவிரவாதிகளாக உள்ளவர்கள் அனேகர் அதே வகையைச் சார்ந்தவர்களே) இதனையே விரும்புகிறார்கள். ஆனால் வெளி உலகம் ஸ்ரீலங்கா அரசின் இந்த சூத்திரத்தைப் புரிந்து கொள்ளாமலும், செயற்பாட்டைத் தெரிந்து கொள்ளாமலும் இருப்பதுதான் வியப்பானது

ஒரு சிறுபான்மை இனம் தனது உரிமைகளைக் கேட்கிறது; போராடுகிறது என்பதற்காக அதனைக் கொன்றொழித்துவிட வேண்டும் என்ற ''புதிய அரசியல் ஒழுங்கை'' ஸ்ரீலங்கா அரசு செயற்படுத்தி வருகிறது

அதனைக் கண்டிக்காமலோ அல்லது நிறுத்துமாறு நிர்ப்பந்திக்காமலோ உலக நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச அமைப்புகளும் வாளாவிருக்கின்றன; பார்த்துக் கொண்டிருக்கின்றன.

அமெரிக்க ஜனாதிபதி கடந்த நான்கு வருடங்களாகப் பதவியில் இருந்த வரை ஸ்ரீலங்கா அரசின் செயற்பாடுகளைக் கண்டிக்கவில்லை; கருத்தும் செல்லவில்லை. இப்போது பதவி விலகப் போகும் தறுவாயில் இலங்கை நிலைமை குறித்து வெறுமனே கவலை தெரிவித்திருக்கிறார்.

வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் ஸ்ரீலங்கா மக்கள் தமது முழு வளங்களையும் ஆற்றலையும் பயன்படுத்த முடியாமல் இருப்பது துரதிர்ஷ்டமானது என்று மூக்கால் அழுதிருக்கிறார். ஆனால் வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள், சட்டரீதியான அரசாங்கத்தினால் கொன்று குவிக்கப்படுவது அவரது கண்களுக்குத் தெரியவில்லை.

இத்தகைய அரசியல் சந்தர்ப்பவாதிகளின் செயற்பாடு, ஸ்ரீலங்கா அரசின் ''புதிய அரசியல்'' ஒழுங்கை ஆதரிப்பதாகவும், அதற்கு ஊக்கமளிப்பதாகவுமே உள்ளது.

உலகச் சட்டாம்பிள்ளைகளாகத் தங்களை ஸ்திரப்படுத்திக் கொள்ள விரும்பும் அமெரிக்கா போன்ற நாடுகள் வெறும் ஆயுதக் குறைப்பு ஒப்பந்தங்களைச் செய்வதால் தம்மைப் பெருமைக்குரியவர்களாக்கிக் கொள்ள முடியாது. மனிதர்கள் எல்லோரையும் சமமாக மதித்து அவர்களது துன்பங்களை உணர்ந்து அவற்றைப் போக்க முன்வரவேண்டும். இல்லையேல் உலகம் முழுவதும் கொலைக்களமாக மாறும்.

# கவச டாங்கிகளை எதிர்த்து புலிகள் வெற்றிகொள்வது எப்படி?

## இளம்பரிதி சொல்கிறார்

நெல்லியடி, ஜன. 8

சிங்களப் படையின் டாங்கிகள் நெருங்க, நெருங்க கையில் சிறு பீரங்கியுடன் போராளி அசையா மனவுறுதியுடன் களத்திலே நிற்கின்றான். பொருத்தமான பகுதியில், பொருத்தமான நேரத்திலே அந்த டாங்கிகள் மீது தாக்குதல் நடத்துகின்றான். டாங்கி சிதறுகிறது. அதில் போராளி வெற்றி பெறுகின்றான். இந்த வெற்றிக்குப் போராளிகளிடையே காணப்படும் அசையா மனவுறுதியே காரணமாகின்றது.

வடமராட்சிக்கோட்டத்தில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் பருத்தித்துறை கிராமக்கோடு புனித குசையப்பர் ஆலய முன்றலில் திரு தயா தலைமையில் நடந்த கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. இளம்பரிதி மேலும் சொன்னதாவது:-

எமது போராளிகள் 24 மணித்தியாலமும் ஓய்வின்றி தமது கடமைகளைச் செய்து வருகின்றார்கள். ஆனால் அரச இராணுவத்திற்கு போதியளவு ஓய்வு கிடைக்கின்றது. சலுகைகள் இருக்கின்றன, தேவைக்கு அதிகமான ஆயுதங்கள் இருக்கின்றன. அப்படியிருந்தும் அரசின் போர் நடவடிக்கைகளை நாம் மழுங்கடிக்கச் செய்து வருகின்றோம்.

மாவீரர்களின் தியாகத்தால் நாம் பாரிய வெற்றிகளைக் கண்டுள்ளோம். இவர்களின் தியாகத்தினால் தான் நாம் இவ்வளவு தூரம் வீர சாதனைகள் படைத்து உலகமே வியக்கும் அளவிற்கு பாரிய வளர்ச்சியைக் கண்டுள்ளோம்.

1992 ஆம் ஆண்டு எம்மைப் பொறுத்தவரையில் பெரு வெற்றியாண்டாக உள்ளது. பல தாக்குதல்களில் நாம் வெற்றிகண்டு ஏராளமான ஆயுதங்களையும் நாம் கைப்பற்றியுள்ளோம். அரச இராணுவத்தின் முன்னேற்ற முயற்சிகளை மழுங்கடித்து அரசின் நிலைப்பாட்டை ஈடாட்டங் காணச் செய்துள்ளோம் — என்றார்.

வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா, வடமராட்சி மகளிர் அவைப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி ஆகியோரும் உரையாற்றினார்கள். (ஒ 109)

# அகதி மக்கள் வசதிகள் பற்றி உடன் கவனிக்க நடவடிக்கை

## புனர்வாழ்வுக் கழகம் தீர்மானம்

தெல்லிப்பழை ஜன. 8

வலி. வடக்கின் இருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் அகதிகளாகத் தங்கியுள்ள மக்களின் அடிப்படை வசதிகளை கவனித்து — அது பற்றி சம்பந்தப்பட்டவர்களுடன் உடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பது

இணுவிலில் அண்மையில் நடைபெற்ற வலி வடக்கு புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்குழுக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

தலைவர் திரு. எஸ். பரமானந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட மற்றும் சில தீர்மானங்கள் வருமாறு;

★ கிளாலி ஊடாகப்பயணம் மேற்கொள்வது அபத்தானதாக இருப்பதால் கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதையை திறப்பதற்கான ஒழுங்குகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு மேற்கொள்வது.

★ வெளி இடங்களில் இருந்து யாழ் குடாநாட்டுக்கான தபால்கள் தாமதமின்றி வந்து சேர்வது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொள்வது. (த 68)

## சான்றிதழ் வழங்கும் விழாவில்

# பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர் சத்தியப்பிரமாணம்

யாழ்ப்பாணம், ஜன 8

பலாலி ஆசிரிய கலாசாலையில் இரண்டு ஆண்டுகள் பயின்று தமது இறுதிப் பரீட்சையை எழுதி வெளியேறிய 221 ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா கடந்த 2ஆம் திகதி பிற்பகல் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

பயிற்சி பெற்று வெளியேறும் ஆசிரிய மாணவர்களின் தலைவர் திரு எஸ் முருகானந்ததாஸ் விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

ஆசிரிய மாணவர்களுக்கு விரிவுரையாளர்கள் சான்றிதழ்களை வழங்கினார்கள். வட மாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் அளித்த ஆலோசனையின் பேரில் தயாரிக்கப்பட்ட ஆசிரியத் தொழில் சத்தியப் பிரமாணம் எடுத்தல் உரையை இவ் விழாவில் மாணவர்கள் அனைவரும் உரத்து சிரத்தையுடன் வாசித்து சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்கள்.

தாம் கடமை உணர்வுடன் மாணவரின் கல்வி விருத்திக்கும், சமூக மேம்பாட்டிற்கும் அயராது உழைப்பதாக அவர்கள் சத்தியம் செய்து கொண்டார்கள்.

ஆசிரியர்களின் சத்தியப்பிரமாண நிகழ்ச்சி நடைபெற்றது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது (க)

# பயிலுநர் பட்டதாரி ஆசிரியர் திங்கள் முதல் பதவி ஏற்பர்

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். மாவட்டத்தில் நியமனம் பெற்றுள்ள பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கான பாடசாலைகளை ஒதுக்குவது சம்பந்தமான வேலைகள் எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் யாழ். கல்வி அலுவலகத்தில் நடைபெறும். சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தமது கடமைகளைப் பொறுப்பேற்பர்.

கடந்த காலங்களில் ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சைகளில் சித்தியடைந்த பட்டதாரிகளில் பலர் கொட்டகலையில் நடந்த பயிற்சிநெறியில் பங்குபற்றினார்கள் என்பதும் — அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கல்வி அமைச்சால் வழங்கப்பட்டுள்ளன என்பதும் தெரிந்தவையே.

உரிய ஆவணங்களுடன் மேற்படி தினங்களில் யாழ். கல்வி அலுவலகத்தில் சமுகமளித்து ஒதுக்கப்பட்ட பாடசாலை விபரத்தைப் பெறுச் செல்லுமாறு பிரதிப் பணிப்பாளர் திரு துரை தியாகராசா கேட்டுள்ளார்

நியமனம் பெறுவோருக்கு 3 வருடங்கள் பயிற்சிக் காலமாக கணிக்கப்படும் என்றும் — அக்காலப்பகுதியில் மாதம் இரண்டாயிரத்து 500 ரூபா அலவன்ஸ் வழங்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (ஜ-3-155)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கியின் ஏற்பாட்டில் ''எச் என். பி'' வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்படும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் 3. 30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் ஆரம்பமாகவிருக்கின்றது

இன்றைய போட்டிகளில் யாழ் - பல்கலைக் கழக அணியை எதிர்த்து ஷப்றா அணியும், யாழ். பற்றீஷியன்ஸ் அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மோதும்.

இந்தச் சுற்றுப் போட்டியில் பத்து அணிகள் பங்குபற்றுகின்றன.

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 8

அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் பதினொரு பேர் கொண்ட அணிகளுக்கிடையில் ஏற்பாடு செய்திருக்கும் காற்சி உதைபந்தாட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டரங்கில் நடைபெறும்

காங்கேசன்துறை யங்றோயல் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானகலா அணியும் நாவாந்துறை சென் மேரீஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணியும் மோதவிருக்கின்றன.

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன 8

யாழ் வட்ட லியோ கழகம் வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் ஏற்பாடு செய்திருக்கும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் 2. 30 மணிக்கு ஆரம்பமாகவிருக்கின்றது.

இன்றைய போட்டிகளில் ஆறு கழக அணிகள் பங்குபற்றுகின்றன.

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 8

லோகேந்திரா வெற்றிக் கிண்ணத்துக்காக ஐடியல் விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இன்று பிற்பகல் 2. 30 மணிக்கு ஆரம்பமாகும்.

இந்த ஆட்டத்தில் யாழ். சென்றலைட்ஸ் வி. க. அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதவிருக்கின்றது (உ)

# இன்று நடப்பவை

சுழிபுரம், ஜன. 8

அபிராமி அந்தாதி முப்பத்தாறாவது செய்யுள் ஆய்வுரை நூல் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை காலை எட்டு மணிக்கு வழக்கம்பரை அம்மன் கோவிலில் நடைபெறும். (உ-28)

o o o

யாழ்ப்பாணம், ஜன 8

உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் மணிவாசக விழாவில் சிறப்புச் சொற்பொழிவும் இன்னிசைக் கச்சேரியும் இடம் பெறும். (உ)

o o o

நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் இன்று நடைபெறும் தீப இசை அரங்கில் செல்வன் ந கருணாகரனின் இசைக் கச்சேரி இடம் பெறும். (உ)

o o o

யாழ்ப்பாணம், ஜன. 8

எதிர்வரும் திங்களன்று நடைபெறவிருக்கும் வெகுஜனப் பேரணி தொடர்பான ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று வடமராட்சிக் கோட்டத்தில் இன்று மாலை 4 மணிக்கு— நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில்— நடைபெறும். வடமராட்சியில் உள்ள சகல வெகுஜன அமைப்புக்களினதும் தலைவர் செயலாளர், மற்றும் மதநிறுவனங்களைச் சேர்ந்த மதகுருமார்கள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுவர்

o o o

காங்கேசன் துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்கங்களைச் சேர்ந்த சாரணர்கள், குருளைச் சாரணர்கள் ஆகியோருக்கான அத்தியாவசிய சேவை முதலுதவி, பயிற்சி ஆண்டுத் திட்டம் ஆகியவை சம்பந்தமான—கூட்டம் ஒன்று சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

o o o

யாழ்ப்பாணம், ஜன. 8

நல்லூர் அரசடி ஜனசக்தி பொது நூலகத்தின் பௌர்ணமி விழா நிகழ்வுகள் இன்று இடம்பெறும். (உ)

o o o

சாவகச்சேரி வாரிவனேஸ்வர இந்து இளைஞர் மன்ற ஏற்பாட்டில் டாக்டர் வ சின்னப்பவினால் இன்று முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 4 மணிக்கு சாவகச்சேரி சிவன் ஆலயத்தில் பகவத்கீதை சொற்பொழிவுகள் இடம்பெறும். (உ-117)

o o o

யாழ்ப்பாணம், ஜன. 8

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் முப்பதாவது ஆண்டு விழா நிகழ்ச்சிகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

முதல் நாள் நிகழ்ச்சிகள் இன்று மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும். ஆண்டு மலர் வெளியீடும் இடம்பெறும். பின்னர் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் (ஒ)

o o o

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ்ப்பாணம், வேலணை கோட்டங்களைச் சேர்ந்த பதவிநிலை ஆங்கில ஆசிரியர்கள் உட்பட சகல ஆங்கில ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இன்று யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். (ஒ)

o o o

யாழ்ப்பாணம், ஜன. 8

''அபிவிருத்தித் திட்டம்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. தீவகக் கோட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி பொ. கலைமதி கருத்தரங்கிற்குத் தலைமை வகிப்பார்.

o o o

கொழும்புத்துறை, ஜன. 8

தமிழீழக் கல்வி வளர்ச்சிக் கழகம் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் நடத்தவிருக்கும் இலவசக் கல்வி வகுப்பு இன்று பிற்பகல் 3-00 மணிக்கு ஆரம்பமாகும். (உ-30)

## கால எல்லை நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். மாவட்ட உதைபந்தாட்டச் சபை கழகங்களைப் பதிவு செய்து கொள்வதற்கான காலம் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டச் செயலக அரசியல் துறை அறிவித்துள்ளது. [உ]

## நாளை

யாழ்ப்பாணம், ஜன 8

எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள வெகுசனப் பேரணி தொடர்பான ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ் இந்து குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை மேற்படி கூட்டத்தில் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஓ-162)

o o o

யாழ்ப்பாணம், ஜன 8

யாழ். பல்கலைக்கழகத்தின் புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கும் ''சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம்'' தொடர் பொது விரிவுரைகளின் இரண்டாம் அமர்வு நாளை சனிக்கிழமை கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இந்த அமர்வில் ''வடமொழி நூல்களில் சைவசித்தாந்தம்'' என்னும் பொருள் பற்றி இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணனும் 'தமிழ் நூல்களில் சைவ சித்தாந்தம்' என்னும் பொருள் பற்றி மெய்யியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. க. சிவானந்தமூர்த்தியும் உரையாற்றுவார்கள். (க)

o o o

யாழ்ப்பாணம், ஜன 8

ஜனவரி மாதத்தில் வீரச்சாவடைந்த — நல்லூர் வட்டவைக்கு உட்பட்ட — மாவீரர்களை நினைவுகூரும் அஞ்சலிக் கூட்டம் நாளை மாலை 7-30 மணிக்கு ஆத்திசூடி கலைமகள் சனசமூக நிலைய முன்றலில் நடைபெறும்.

o o o

கொழும்புத்துறை ஜன 8

நாயன்மார்கட்டு சனசமூக நிலையம் நடத்தும் கவிதைப் பட்டறை நிகழ்ச்சி நாளை 9 ஆம் திகதியும் மறுநாள் 10 ஆம் திகதியும் காலை 9.00 மணிக்கு நடைபெறும். (ஒ-30)

## ப.நோ.கூ.ச வில் சர்க்கரை!

பொங்கல் தினத்தை முன்னிட்டு யாழ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தனது வாடிக்கையாளர்களுக்கு சர்க்கரையும், நாட்டு பச்சை அரிசியையும் விநியோகிக்கவுள்ளது.

பங்கீட்டு அட்டைக்கு அரைக்கிலோ சர்க்கரை 30 ரூபாவுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்—

இன்று பௌர்ணமி தினம் உட்பட பொங்கல் வரையான சகல விடுமுறை தினங்களிலும் யாழ் பநோ கூ சங்கக் கிளைகள் யாவும் திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்பலம் சின்னராசா M.P.S.

(பிரபல வர்த்தகர்)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொ. சின்னராசா 07-01-1993 அன்று சிவபதமடைந்து விட்டார். இவர் காலஞ்சென்ற பொன்னம்பலம் சின்னத்தங்கச்சியின் அன்பு மகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், சிவனேஸ்வரி, மாணிக்கராசா, யோகராசா (பிரான்ஸ்), மகாதேவா (தேவன்), (நியூவசந்தாஸ், பஸ்நிலையம்), ஆனந்தராசா, கமலேஸ்வரி, விமலேஸ்வரி (ஜேர்மன்), சுந்தரராசா (சுவிஸ்), சற்குணராசா (சவூதி) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரநாதன், செல்வராணி, யோகேஸ்வரி, ரங்கநாயகி, பாரதி, ராதாகிருஷ்ணன், தில்லைநடேசன், ரஞ்சனி, லலிதா (புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கனகாம்பிகை, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 08-01-1993 (வெள்ளிக்கிழமை) காலை 10 மணியளவில் நடைபெற்று. பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்

தகவல்:
மகாதேவா
(மகன்

69 அம்மன் றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (23969)

## திருமதி செல்லம்மா பொன்னையா

மல்லாகத்தைச் சேர்ந்த திருமதி செல்லம்மா பொன்னையா 03-01-1993 அன்று பொகவந்தலாவையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், விவேகானந்தன், சரஸ்வதிதேவி, கமலாதேவி, சறோஜினிதேவி, லோகராஜா, சகுந்தலாதேவி, இராசலட்சுமிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரது தகனக்கிரியைகள் பொகவந்தலாவையில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. விவேகானந்தன்
(மகன்)

''செல்வபவனம்''
மதி வீதி,
மல்லாகம். (5479)

## திருமதி. இ. ஆனந்தகுமாரசுவாமி

(இளைப்பாறிய அதிபர்,
கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை)

கடந்த 5 ஆம் திகதி சிவபதமடைந்த திருமதி இ. ஆனந்தகுமாரசுவாமியின் இறுதிக் கிரியைகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி வரையில் அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறேன்.

தகவல்
செல்வி.பு. நாகசுந்தரம்

கோப்பாய் தெற்கு

## மாணிக்கம் இராசலிங்கம்

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த ஒய்வுபெற்ற அதிபரும், பத்திரிகையாளருமான மாணிக்கம் இராசலிங்கம் 07-01-93 இல் காலமானார். இவர் கமலாம்பிகையின் அன்புக் கணவரும், கலாவதி (நகராட்சிமன்றம், பருத்தித்துறை), கலாநிதி (ஜேர்மனி), சுகுணவதி, நீலாவதி, புஸ்பவதி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கணேசலிங்கம், கணேசமணி (ஆசிரியர், மத்திய கல்லூரி), பூபாலராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், குமரன், சங்கீதா ஆகியோரின் பேரனும், திருநாவுக்கரசு அவர்களின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08-01-93) வெள்ளிக்கிழமை காலை 10-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் நுணாவில் குச்சப்புட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

மட்டுவில் தெற்கு.
(23974)

## நடராசா செல்லம்மா

புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் 214/7 இராமநாதன் வீதியில் வசித்தவருமாகிய நடராசா செல்லம்மா 7-01-93 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், பேரம்பலம், யோகேஸ்வரன் [சுவிஸ்], ஜெகதீஸ்வரன், கோடீஸ்வரன் [சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி யோகேஸ்வரன், திருமதி பேரம்பலம், திருமதி கோடீஸ்வரன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று [8-01-93] காலை 9 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

தகவல்:
மனோன்மணி

2.4/7 இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.
[23976]

யாழ். மாவட்டத்திற்கான

# ஜி. சீ. ஈ. பெறுபேறுகள் மேலும் தாமதமாகும்?

யாழ்ப்பாணம், ஜன. 8

கடந்த ஆகஸ்ட் மாதம் நடந்த ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையின் முடிவுகள் யாழ்ப்பாணம வந்து சேர்வது மேலும் தாமதமாகலாம் எனத் தெரியவருகிறது.

கொழும்பில் பரீட்சை முடிவுகள் வெளியானதை அடுத்து விமான மூலம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியுடன் எடுத்து வர யாழ் பிராந்திய கல்விப் பணிப்பாளர் முயற்சி மேற்கொண்டிருந்தார்.

யாழ். மாவட்டத்துக்கான பரீட்சை முடிவுகள் கடந்த செவ்வாய்க்கிழமை வரை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் கொழும்பு அலுவலகத்தில் ஒப்படைக்கப் படவில்லை என்று தெரிய வந்தது.

பருத்தித்துறையில் தற்சமயம் கப்பல்கள் எதுவும் தரித்து நிற்காததால், விமான மூலம் பரீட்சை முடிவுகள் எடுத்து வரப்பட்டாலும், அவற்றை இங்கு கொண்டு வரமுடியாத நிலையுள்ளது என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

அதனால் வேறு மார்க்கம் மூலம் பரீட்சை பெறுபேறுகளை இங்கு எடுத்துவர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-3)

## தற்காலிக ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 8

புதிதாக நியமனம் பெற்ற உதவி திட்டமிடல் பணிப்பாளர்களில் — பிறமாவட்டங்களுக்குத் தெரிவானவர்கள் — யாழ் செயலகத்திலேயே கடமைபுரிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்து நிலைமை சீரில்லாததால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

[ஒ-162]

## காலமானார்

பழம்பெரும் பத்திரிகையாளர்களில் ஒருவரான திரு. மா. இராசலிங்கம் நேற்று மட்டுவிலில் காலமானார்.

உதயனின் ஆரம்பகாலம் தொடக்கம் அவர் சாவகச்சேரிச் செய்தியாளராகப் பணிபுரிந்து வந்தார். கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக அவர் யாழ்ப்பாணம், கொழும்புப் பத்திரிகைகளின் செய்தியாளராகப் பணிபுரிந்தார். கொழும்பில் கடமையாற்றிய காலத்தில் இந்தியப் பத்திரிகைகளின் செய்தியாளராகவும் பதவி வகித்தார் நீண்டகாலம் ஆசிரியராகப் பணிபுரிந்த திரு. இராசலிங்கம் அதிபராகவும் உயர்வு பெற்றிருந்தார். (அ)

## லலித் கட்சியின் தலைவர் தெரிவு

லலித் - காமினி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் தெரிவு அடுத்த வாரம் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்படுகிறது. (ஒ-6)

## இராணுவ எச்சரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கிலிக்கன் திருச்சபை நடவடிக்கைகள் குறித்து ஆயர் விசேட கவனம் எடுப்பார் என்றும்—

பொதுமக்கள் பிரதிநிதிகளையும், விடுதலைப் புலிகள் பிரமுகர்களையும் அவர் சந்திப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று மாலை 4 மணிக்கு யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரியில் ஆயருக்கு பொது வரவேற்பளிக்கப்படும்.

இதற்கிடையில்—

தமது அறிவிப்பையும் மீறி அங்கிலிக்கன் ஆயர் யாழ். ஏரியைக் கடந்திருப்பதை அடுத்து அவருக்கு இராணுவம் எச்சரிக்கை விடுத்திருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று நேறறிரவு அறிவித்தது.

## பம்பாயில் கலவரம்

பம்பாயில் கடந்த மூன்று நாட்களாக இடம்பெற்று வரும் இந்து முஸ்லிம் கலவரத்தில் 17 பேர் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்பட்டது.

அயோத்தி சம்பவத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற வன்செயல்களின் தொடர்ச்சியாகவே தற்சமயம் கலவரங்கள் அங்கு நடந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 230 கோடி ரூபா ஒதுக்கீடு!

கொழும்பு, ஜன 8

இவ் வருடம் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் புனர்வாழ்வு வேலைகளை மேற்கொள்ள 230 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. இதில் நூறு கோடி ரூபா அகதிகளுக்கான உலர் உணவு விநியோகத்திற்கும் 39 கோடி ரூபா உயிரிழந்த மற்றும் காயமடைந்தோருக்கு நஷ்டஈடு வழங்கவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (உ-6)

## சுங்க ஊழியருக்கு சம்பளமில்லை

யாழ் மாவட்ட சுங்கப் பகுதி ஊழியர்களுக்கு கடந்த மூன்று மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய இடங்களில் மட்டுமே சுங்கப் பகுதி ஊழியர்கள் கடமையாற்றுகின்றார்கள். ஏனைய பகுதிகளில் கடமையாற்றும் ஊழியர்கள் கொழும்புக்கு இடம் மாறிச் சென்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-ரி[


றேடியன்ற் ஆதரவில் ஐடியல் கிரிக்கெட் கழகம்
நடத்தும்

**லோகேந்திரா**

வெற்றிக் கேடயத்துக்கான

மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி - 1992

**இறுதியாட்டம்**

அரியாலை ஐக்கிய வி. க.
எதிர்
சென்ரலைட்ஸ் வி. க.

இன்று பி. ப. 2.30 மணி
இடம்: அரியாலை சனசமூக நிலைய மைதானம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஐடியல் கிரிக்கெட் கழகம்

(23977)



**மாபெரும் வெகுஜனப் போராட்டமும் ஊர்வலமும்**

காலம் : 11 - 1 - 93 திங்கட்கிழமை
நேரம் : 10.00 மணியளவில்
ஆரம்பம்: நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றல்

**நாலு அம்சக் கோரிக்கை**

1. 32 மாதகால அர்த்தமற்ற போரை முடிவிற்கு கொண்டு வருதல்
2. பூநகரி இராணுவத்தை வாபஸ் பெற்று அதனூடான பாதையை மக்களின் பாவனைக்காகத் திறக்கப்படல்
3. அத்தியாவசியப் பொருள்களின் தடையை நீக்கி சகல பொது மக்களுக்கும் கட்டுப்பாடு, தட்டுப்பாடின்றி கிடைக்கக் கூடியதாக விநியோகம் செய்தல்
4. விடுதலைப் புலிகளுடன் உடனடியாக பேச்சு வார்த்தையை ஆரம்பித்தல்

நத்தார் தினத்தன்று நடைபெற்ற கண்மூடித்தனமான விமானத் தாக்குதலினால் ஏற்பட்ட படுகொலைகளைத் தெரியப்படுத்தல்.

ஊர்வலம் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் [ஆரம்பமாகி, கோவில் வீதி வழியாக செஞ்சிலுவைச் சங்கப் பணிமனையை அடைந்து, பின்னர் ஆஸ்பத்திரி வீதியூடாக] கச்சேரியை அடைந்து, இவ் இரண்டு இடங்களிலும் மகஜர் கையளித்தல்

அனைத்து மக்களையும் ஒன்று திரண்டு இவ் ஊர்வலத்தில் பங்கு பற்றி சிறப்பிக்குமாறு

அழைக்கின்றோம்.

வலிகாமம் வர்த்தக சங்கங்கள்

[சி-2534]


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா பிறேமதாசன் (பிறேமன்)

காங்கேசன்துறை பெற்றோல் நிலைய ஒழுங்கையைச் சேர்ந்தவரும், சித்தன்கேணியில் தற்காலிகமாக வசித்தவருமான கந்தையா பிறேமதாசன் 6-1-93 [புதன்கிழமை] சித்தன்கேணியில் நடைபெற்ற விமானத் தாக்குதலில் அகால மரணமடைந்தார்.

இவர் கந்தையா — இராசமலர் தம்பதிகளின் இளைய புதல்வனும், புஷ்பராணி, கருணதாசன் (பிரான்ஸ்), கருணாதேவி, விஜயதாசன் (பிரான்ஸ்), விஜயதேவி (சுவிஸ்), ஜெயதாசன் (பிரான்ஸ்), ஜெயராணி (ஆசிரியை, சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலை ஆகியோரின் இளைய சகோதரரும், க. கமலசேகரம் (தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை), திலகதாசன் (சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), மா. சிவலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் நிருஜா, சந்தியா (உடுவில் மகளிர் கல்லூரி), கபில்ஜா, ஸாமப்பிரியன் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்; தகனக்கிரியைகள் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
குடும்பத்தினர்

சித்தன்கேணி.
(23978)

## கா. பொ. சோமசுந்தரம்

வேலணையைப் பிறப்பிடமாகவும், சரவணையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சோமசுந்தரம் அவர்கள் 7-1-93 நேற்று சிவபதமடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு பொன்னையா — கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி சிதம்பரப்பிள்ளை பரமேஸ்வரி, திருமதி வரதராசன், புவனேஸ்வரி (டென்மார்க்), காலஞ்சென்ற ஜெகசோதி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. வி சிவசிதம்பரப்பிள்ளை( E. சண்முகம் ஸ்ரோர்ஸ், கொழும்பு), திரு குமாரசாமி வரதராசன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கா பொ. தருமலிங்கம்பிள்ளை, காலஞ்சென்ற கா. பொ. காராளசிங்கம் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (-81-93) வெள்ளிக்கிழமை இல. 51, வைமன் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு பி. ப. 2 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சோ. செல்லம்மா
(மனைவி)

51, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

[23979]

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் [illegible] 08-01-1993 இல் [illegible]சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org